1972 டிசம்பர் 14]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத்தலைவர் எம்.ஜி.ஆரிடம் நேரிடையாக விசாரித்துக்கூட அந்தத் தகவலை இங்கே அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு விருப்பம் இருந்தால், அவரே அதுபற்றி தனிப்பட்ட முறையில் சென்று கேட்டுக்கொள்ளலாம். மு.ப. 10–30

(3) அறிவிப்புகள்

(அ) சில உரிமைப் பிரச்சினைகள் ஒத்திவைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, சில உரிமைப் பிரச்சினைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரு. கணபதி அவர்கள் குமுதம் பத்திரிகையின் மீதுகூட ஒரு உரிமைப் பிரச்சினை தந்திருக்கிறார்கள். இந்த உரிமைப் பிரச்சினைகள் எல்லாம் ஒவ்வொரு வகையில் இன்றைக்கு நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குக்கு சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றை எடுத்துக் கொண்டு இங்கே விவாதிப்பது உசிதமாக இருக்காது. எனவே, இந்த உரிமைப் பிரச்சினைகளைப் பின்னால் எடுத்துக்கொள்ளலாம் என்கிற என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. இராம அரங்கண்ணல் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். உரிமைப் பிரச்சினைகளை எடுத்துக்கொள்வது நீதிமன்றத்தின் முன்னால் இருக்கும் வழக்கை பாதிக்கக் கூடாது என்கிற காரணத்தினால் அவற்றைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. வழக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத உரிமைப் பிரச்சினைகள்கூட இருக்கின்றன. சட்டமன்றத்தை, சட்டமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் உள்ளதுபற்றி கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினைகளை எடுத்துக் கொள்ளலாம். விவாதம் வழக்கு சம்பந்தமாக எந்தவகையிலும் போகாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, now that the Deputy Speaker has given the ruling, is it fair on our part to talk about any collateral proceeding and I would like to have clarification about it. So far as the matter which is pending before the court is concerned. It is pointed out that we do not discuss in full the details regarding the article or comments made in that particular paper. So, it is better that we do not rake up the controversy even though this House is paramount and

supreme. It is pointed out that we should wait till the decision has been rendered, and that is the proper course that is open to us. I would like to have further clarification from the Chair.

Dr. H. V. HANDE : Sir, I also support the view that till the court decides we should postpone discussion on the matter. After the court decides in favour of the decision of the Deputy Speaker, we can take action and 'till then we can defer action in the matter.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, மற்ற உரிமைப் பிரச்சினைகள் எப்படி இருந்தாலும் நான் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை—இந்த அவை உறுப்பினர்களின் கௌரவத்தை, கண்ணியத்தைப் பாதுகாக்கக் கொண்டுவரப் பட்டுள்ளதாக அமைந்திருக்கிறது. இது நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நீதிமன்றத்தில் உள்ள வழக்குக்கு எந்தவகையிலும் சம்பந்தப்பட்டதாகக் கருத முடியாது. ஆகவே இதை மட்டுமாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான், கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினைகள் பற்றி அவைக்கு நேரிடையாகச் சொல்லாமல் சொன்னேன். காரணம் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குபற்றி பேசக் கூடாது என்பது என் கருத்து. அதன் காரணமாக நமக்கே இந்த அவையில் 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் பற்றி ஐயப்பாடு இருப்பதாக அர்த்தம் இல்லை. அந்தப் பொருளிலும் நான் சொல்லவில்லை. நமது அரசியல் சட்ட அமைப்பின் படி நீதி மன்றத்திற்கு நாம் அளிக்கக்கூடிய கௌரவம், மரியாதை காரணமாக —நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குபற்றி விவாதத்தில் வந்துவிடக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்றுதான் குறிப் பிட்டேன். திரு. கணபதி அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை நான் படித்தேன். அதை எடுத்துக் கொண்டாலும் நிச்சயமாக யாராவது ஒரு உறுப்பினர் வழக்குபற்றி பேசாமல் இருக்கமாட்டார். உடனே நான் அதைப் பேரவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட உத்தரவிட வேண்டியதாகத்தான் அமையும். ஒரு பத்திரிகையில் உறுப்பினர்கள் 'அநாகரீகமாக' நடந்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டால் 'நாகரீகம் எது, அநாகரீகம் எது' என்கிற விவாதம் வருகிறபோது 2-ஆம் தேதி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி வரத்தான் செய்யும். ஆகவேதான் இந்த உரிமைப் பிரச்சினைகளை எல்லாம் பின்னால் எடுத்துக்கொள்ளலாம் என்பதாக நான் தீர்ப்பு அளிக்கிறேன். பேரவை உறுப்பினர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.